<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

<u>அசல் வழக்கு எண். 18/2022</u>

PW2 – திருமதி.சீதாலெட்சுமி நாள். 04.10.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. இறந்துபோன ஆறுமுகம் என்பவர் யார் என்றால் எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். என் உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 6 ஆண்மக்கள், 2 பெண்மக்கள் ஆவார்கள். என் உடன்பிறந்தவர்களில் எத்தனை பேர் உயிருடன் உள்ளனர் என்றால் எனது சகோதரர் அழகர்சாமி மட்டும் உயிருடன் உள்ளார். ஆறுமுகம் என்பவருக்கு வாரிசு சினேகாவை வாரிசாக விளம்புகை செய்யகோரி தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். சினேகா என்பவர் இறந்துபோன ஆறுமுகம், கமலா என்பவர்களுக்கு எவ்வகையில் வாரிசு ஆவார் என்றால் வாதி சினேகா என்பவர் 6 மாத குழந்தையாக இருக்கும்போது கமலாவின் சகோதரி சாந்தி என்பவரிடமிருந்து தத்து எடுக்கப்பட்டார்.

2. மேற்படி வாதியை தத்தெடுக்கும்போது மேற்படி சாந்தி மற்றும் அவரது கணவர் உயிருடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். மேற்படி வாதியை தத்தெடுக்கும்போது தமிழ்நாடு தத்தெடுப்புச் சட்டத்தின்படி தத்தெடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நானும், எனது சகோதரர் அழகர்சாமியும் உயிருடன் இருப்பதால் இறந்த ஆறுமுகத்திற்கு நாங்கள் தான் வாரிசுகள் என்றால் சரியல்ல.

ஆறுமுகத்தின் மனைவி கமலாவின் உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 3 பேர் ஆவார்கள். மேற்படி 3 உடன்பிறந்தவர்களில் 2 பேர் உயிருடன் உள்ளார்கள். இறந்த கமலா என்பவருக்கு உயிருடன் இருக்கும் அவரது உடன்பிறப்புகள் தான் வாரிசுகள் என்று சொன்னால் சரியல்ல. வாதி சினேகா இறந்த ஆறுமுகம், கமலாவின் சட்டப்படியான வாரிசு இல்லை என்றும், வாரிசாக விளம்புகை பரிகாரம் கேட்க தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்கக்கூடிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதில்லை என்றும், அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை